# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.

| | |
|---|---|
| Case No: | **S.C.No. 79/2023** |
| Prosecution Witness : | **PW - 1** |
| Defence Witness : | |
| Name : கலைவாணன் | Taluk : |
| S/o. | Age : |
| Religion : | Work : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day

**02.12.2024**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம், மதனத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரி சங்கரை தெரியும். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த மனோகரன் என்பவர் வீட்டில் வைக்கோல் போர் போட்டுக்கொண்டிருந்தேன். அப்பொழுது, அங்கு வந்த சங்கர் குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே உன்னை யார் வேலை பார்க்க சொன்னது என்று கேட்டார் . என்னை ஏன் திட்டுகிறாய் என்று நான் கேட்டதற்கு உன்னை தீர்த்தக்கட்டாமல் விடமாட்டேன் என்று கூறிக்கொண்டே அவர் கையில் வைத்திருந்த அரிவாளால் எனது வலதுபக்க மண்டையில் வெட்டினார். நான் கையால் தடுக்க வந்தபோது எனது இடது உள்ளங்கையில் வெட்டிவிட்டார் . நான் கத்தும் சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்த கோவிந்தராஜ் மகன் மனோகரன் , கண்ணன் மகன் ரவிச்சந்திரன் , முத்தையன் மகன் செந்தில்குமார் , விமல் மனைவி புனிதா , மதியழகன் மனைவி

சைலஜா ஆகியோர்கள் அருகில் வந்ததும் எதிரி என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டார். அவ்வாறு போகும்போது உன்னை விடமாட்டேன் தீர்த்துக்கட்டிவிடுவேன் என்று மிரட்டிவிட்டுப்போனார் . என்னை எதிரி வெட்டிய அரிவாளை என்னால் அடையாளம் காட்டமுடியும் . தற்பொழுது என்னிடம் காட்டப்படும் அரிவாள் சா .பொ.1. பின்னர், சுரேஷ் மனைவி லதா , ரமேஷ் மனைவி கவிதா ஆகியோர் என்னை 108 ஆம்புலன்சில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தனர் . த.பழூர் போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள் . நான் சொன்னதை எழுதிக்கொண்டார்கள் . என்னிடம் அந்த புகாரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அதசாஆ .1 ஆகும். நான் மருத்துவமனையில் ஐந்து நாட்கள் சிகிச்சை பெற்றேன் . எனது தலையிலும் , கையிலும் 55 தையல் போட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.)
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.

Case No: **S.C.No. 79/2023**

Prosecution Witness : **PW - 2**

Defence Witness :

Name : மனோகரன் Taluk :

S/o. Age :

Religion : Work :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day

**02.12.2024**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் மதனத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன் . ஆஜர் எதிரி சங்கரை தெரியும். அசா.1 கலைவாணனை தெரியும். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் அ.சா.1 கலைவாணன் எனது வீட்டில் வைக்கோல் போர் போட்டுக்கொண்டிருந்தார். நான் அந்த இடத்தை கலைவாணணிடம் காட்டிவிட்டு நான் வைத்திருக்கும் மளிகை கடைக்கு போனேன் . நான் சுமார் 100 அடிக்குள் நடந்து போய்க்கொண்டிருந்தபொழுது கன்னாபின்னாவென்று திட்டிக்கொண்ட சத்தம் கேட்டது . நான் அந்த இடத்தில் இருந்து திரும்பி வந்தேன் . நான் பார்த்துக்கொண்டு வந்தபோதே சங்கர் அரிவாளால் கலைவாணன் தலையில் வலதுபக்கம் வெட்டினார். கலைவாணன் கையால் தடுத்தபொழுது அதே அரிவாளால் இரண்டாவது வெட்டை கலைவாணன் இடது கையில் வெட்டினார் . நான் கிட்ட ஓடும்போதே ஆஜர் எதிரி சங்கர் தெற்குபக்கமாக ஓடிவிட்டார் . எதிரி

கலைவாணனை வெட்டிய அரிவாளை என்னால் அடையாளம் காட்டமுடியும் . சா.பொ.1 தான் அந்த அரிவாள். கலைவாணன் மயங்கி கீழே விழுந்துவிட்டார். சுத்தி இருந்த ஜனங்கள் எல்லாம் அங்கு வந்துவிட்டார்கள் . ஆம்புலன்ஸ் வந்தது. கலைவாணனை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துப்போனார்கள் . போலீசார் மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.)
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **S.C.No. 79/2023** |
| Prosecution Witness : | **PW - 3** |
| Defence Witness : | |
| Name : செந்தில்குமார் | Taluk : |
| S/o. | Age : |
| Religion : | Work : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day

**02.12.2024**

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் மதனத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன் . ஆஜர் எதிரி சங்கரை தெரியும். அசா.1,2 ஆகியோரை தெரியும். கடந்த 05.03.2021 அன்று மதியம் 3.00 மணியளவில் மனோகரன் வீட்டு முன்பு ஒரே சத்தமாக கேட்டது . நான் ஓடிப்போய் பார்த்தபொழுது கலைவாணன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். சங்கர்தான் கலைவாணனை தலையிலும் , கையிலும் வெட்டிவிட்டார் . கலைவாணனை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.)
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**<u>IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | |
|---|---|
| Case No: | **S.C.No. 79/2023** |
| Prosecution Witness : | **PW - 4** |
| Defence Witness : | |
| Name : ரவிச்சந்திரன் | Taluk : |
| S/o. | Age : |
| Religion : | Work : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day

**<u>02.12.2024</u>**

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் அரியலூர் மாவட்டம் மதனத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா.1 கலைவாணனை தெரியும் கடந்த 05.03.2021 ஆம் தேதி அன்று மதியம் 3.00 மணியளவில் மனோகரன் வீட்டிக்கு முன்பு சத்தம் கேட்டது . நான் ஓடிப்போய் பார்த்தேன். அப்பொழுது சங்கர் கலைவாணனின் வலது மண்டையிலும் , இடது கையிலும் வெட்டிவிட்டு ஓடிவிட்டார். சங்கர் ஓடியதை நான் பார்த்தேன். 108 ஆம்புலன்சில் கலைவாணனை சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலன்டினா,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(மு.கூ.பொ.)
அரியலூர்.